7. அறிவிப்புகள்.

(அ) அலுவல் ஆய்வுக்குழுவின் முடிவுகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஓர் அறிவிப்பு. 31—8—1970 ஆம் நாள் அன்று நடந்த அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு செய்யப்பட்ட நிகழ்ச்சி நிரல்.

1—9—1970 முதல்
6—9—1970 வரை ஏற்கனவே அறிவித்துள்ளபடி.
7—9—1970 கண்டனத் தீர்மானத்தின் மீது விவாதம்.

8. தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1970–71-ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் மூன்று மணி நேரம் தான் இருக்கிறது. மின்சார வாரிய விவாதத்திற்கு எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்ளலாம், துணை மானியக் கோரிக்கைக்கு எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்ளலாம்? (சில உறுப்பினர்கள்: துணை மானியக் கோரிக்கைகளை முதலில் எடுத்துக் கொள்ளலாம்)

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையை முன்னாலோ பின்னாலோ எடுத்துக்கொள்ள லாம். ஒன்றரை மணிக்குள் எப்படியும் முடித்துவிட வேண்டும். அப் பொழுது தான் மேலவைக்குச் செல்ல முடியும். மின்சார வாரிய நிதி நிலை விவாதத்தை முன்னாலேயும் துணை மானியக் கோரிக்கை விவாதத்தை பின்னாலேயும் எடுத்துக் கொள்ளலாம். அல்லது துணை மானியக் கோரிக்கை விவாதத்தை முன்னாலேயும் மின்சார வாரிய விவாதத்தைப் பின்னாலேயும் எடுத்துக் கொள்ளலாம். எப்படி வேண்டுமானாலும் செய்யலாம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மின்சார வாரிய விவதாத்தை முதலிலே எடுத்து-க்கொள்ளலாம். நாளை நிதி ஒதுக் கீடு விவாதம் இருக்கிறது, துணை மானியக் கோரிக்கை விவாதம் முடிவுறுவிட்டாலும் நாளை சேர்த்து எடுத்துக்கொள்ளலாம். எனவே மின்சார வாரிய விவாதத்தை முதலிலே எடுத்துக்கொள்ள லாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1-1/2 மணி நேரத்தில் அதை முடிக்க வேண்டும். அமைச்சர் அவர்களுக்கு பதில் அளிக்க எவ்வளவு நேரம் வேண்டும்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: 1/2 மணி நேரம் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவருக்கு எவ்வளவு நேரம் வேண்டும்?

திரு. பி. ஜி. கருத்திருமன்: 1/2 மணி நேரம் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1 மணி நேரம் போனால் மீதி யுள்ள 1/2 மணி நேரத்தில் மூன்று பேர்கள் பேச வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு உறுப்பினரும் 10 நிமிடங்கள் தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.